## பத்திரிக்கை செய்தி

திருப்பூர் மாவட்டம், பல்லடம், அண்ணா நகர், பூண்டுக்காரர் 5வது வீதி, கதவு எண்.135A-ல் வசித்து வரும் ஜப்பார் மகன் திரு.பைஜ் அகமது என்பவர் பல்லடம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் வாரச்சந்தைகளுக்கு சென்று மளிகை பொருட்கள் வியாபாரம் செய்து வருகிறார். திரு.பைஜ் அகமது பெயரில் பல்லடம் கிராம புல எண்.309/1, சைட் 21 மற்றும் 22-ல் சுமார் 1392 சதுரடி இடம் உள்ளது. மேற்படி இடத்தில் 2018-ம் வருடம் சுமார் 1300 சதுரடியில் வீடு கட்டி அதை இரண்டு பகுதிகளாக வாடகைக்கு விட்டுள்ளார். பின்னர் 2022-ம் ஆண்டு சுமார் 1300 சதுரடியில் முதல் தளத்தில் வீடு கட்டி இரண்டு பகுதிகளாக வாடகைக்கு விட்டுள்ளார். அதில் தரைத்தளத்தில் உள்ள வீட்டில் இருந்த மின் இணைப்பை முதல் தளத்திற்கும் பயன்படுத்தப்பட்டு வந்ததால் புதிய மின் இணைப்பு கோரி 21.05.2024-ம் தேதி ஆன்லைனில் விண்ணப்பித்துள்ளார். பின்னர் 21.05.2024-ம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு திரு.சுரேஷ் பாபு, இளமின் பொறியாளர் திரு.பைஜ் அகமதுவை செல்போனில் தொடர்பு கொண்டு வீட்டை ஆய்வு செய்ய வருவதாக கூறியுள்ளார். பின்னர் சுமார் 10.00 மணியளவில் பைஜ் அகமது புதிதாக முதல் தளத்தில் கட்டியிருக்கும் வீட்டை ஆய்வு செய்துவிட்டு வீட்டை ஒட்டி 2 அடியில் லைன் செல்வதாகவும், 4 அடி தள்ளி வெளியே புதியதாக மின் கம்பம் நட வேண்டும் அதற்கான செலவுகளை நீங்களே பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அலுவலகத்தில் தன்னை வந்து பார்க்கும்படி கூறியுள்ளார். அதன்படி திரு.பைஜ் அகமது உதவி பொறியாளர், இயக்கமும் பராமரிப்பும், நகரம் பல்லடம் அலுவலகத்திற்கு சென்று திரு.சுரேஷ் பாபு, இளமின் பொறியாளரை சந்தித்துள்ளார். அப்போது திரு.சுரேஷ் பாபு அவர்கள் மின் கம்பம் கண்டிப்பாக போட்டுத்தான் ஆகவேண்டும், அதற்கான் எஸ்டிமேட் தயார் செய்தவுடன் உங்களுக்கு மெசேஜ் வரும். அந்த பணத்தை கட்டினால் தான் உங்களுக்கு மின்கம்பம் போட்டு சர்வீஸ் கனெக்சன் கொடுக்க முடியும் என்று கூறியுள்ளார். 27.05.2024-ம் தேதி திரு.பைஜ் அகமது புதிதாக மின்கம்பம் அமைக்க ஆன்லைனில் விண்ணப்பித்துள்ளார். அதன் பின்னர், 07.06.2024-ம் தேதி மாலை சர்வீஸ் கனெக்ஷன் எஸ்டிமேட் அப்ரூவல் ஆனதாகவும், ரூ.11,221/-ஐ 15 நாட்களுக்குள் செலுத்தவேண்டும் என்று திரு.பைஜ் அகமதுவின் செல்போனுக்கு குறுந்தகவல் வந்துள்ளது. பின்னர் 11.06.2024-ம் தேதி இளமின் பொறியாளர் திரு.சுரேஷ் பாபு காலை சுமார் 08.45 மணிக்கு திரு.பைஜ் அகமதுவின் செல்போனுக்கு தொடர்பு கொண்டு பணம் கட்டிவிட்டீர்களா என்று கேட்டதாகவும், அதற்கு பணம் கட்டவில்லை என்றும், மெசேஜ் வந்துள்ளது, பணத்தை கட்டிவிடுகிறேன் என்று கூறியுள்ளார், அதற்கு இளமின் பொறியாளர் பணத்தை கட்டினால் தான் கனெக்ஷன் கொடுக்க முடியும் என்றும், அதற்கு தனக்கு தனியாக ரூ.5,000/- கையூட்டு கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார். அதனால் லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாத திரு.பைஜ் அகமது திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் திரு.சுரேஷ் பாபு, இளமின் பொறியாளர், இயக்கமும் பராமரிப்பும், நகரம் பல்லடம் என்பவர் மீது புகார் கொடுத்துள்ளார். மேற்படி புகாரின்படி வழக்கு பதிவு செய்த திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினர் பொறிவைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். அந்த பொறிவைத்து பிடிக்கும் நடவடிக்கையின் தொடர்ச்சியாக 12.06.2024-ம் தேதி திரு.சுரேஷ் பாபு, பல்லடம் உதவி பொறியாளர் அலுவலகத்தில் வைத்து வாதி திரு.பைஜ் அகமதுவிடம் ரூ.5,000/- கேட்டு பெற்றுக்கொண்டபோது திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினரால் கையும் களவுமாக கைது செய்யப்பட்டார்.